## முதல்வரின்

# சவுண்ட் - ஆக்ஷன் - டயலாக்!

ரசிகர்களை வெறியூட்டுவதற்கும் உசுப்பேற்றுவதற்கும் தயாரிக்கப்பட்ட பேச்சுகளை பேசி பழக்கப்பட்டவர் விஜய். இப்போது முதல்வர் பதவிக்கு வந்த பிறகும் அதைத் தவிர வேறு எந்த பேச்சையும் அவரால் பேச முடியவில்லை. எனவே தான் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரையும் அவையை விட்டு வெளியேற்றிவிட வேண்டும் என்பது அவரது முதல் பிரச்சினையாக இருந்தது.

அதற்காகவே வசைச் சொற்களை வீசினார் ; எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்த பிறகு தான் அவருக்கு நிம்மதியும் மகிழ்ச்சியும் கிடைத்தது அப்பாடா; இனி ஸ்கிரிப்ட்டை ரசிகர்களிடம் பேசுவது போல் பேசலாம் என்ற நிம்மதி பெருமூச்சு அவருக்கு வந்திருக்கிறது. எதிரே அமர்ந்திருக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான் ரசிகர்கள் அல்ல! அவர்கள் முதல்வர் விஜயின் பேச்சுக்கு விசில் அடித்து கைதட்டி ஆரவாரம் செய்ய சட்டமன்றத்திற்கு வரவில்லை என்பதை அவருக்கு பேச்சு தயாரித்து கொடுத்தவர்கள் உணர்ந்திருக்க வேண்டும்.

**விஜய் வருகைக்கு முன் தங்கள் அலுவலகத்துக்கு சோபா வந்தது என்பதை சில தலைவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் ;இதற்கு முதல்வர் விஜய்யிடம் இருந்து ஏன் திட்டவட்டமான மறுப்பு வரவில்லை? பூசி மெழுகி அதை கடந்து செல்வதற்கு இவர் ஏன் முயற்சிக்கிறார்?**

தமிழ்நாடு அரசு நிகழ்ச்சிகளில் "தமிழ்த்தாய் வாழ்த்து" பாடி தொடங்கும் மரபு தமிழ் நாட்டில் நீடிக்கிறது. "தமிழ்த்தாய் வாழ்த்து" தான் தமிழ்நாடு அரசின் பாடல் என்று திராவிட மாடல் ஆட்சி நடத்திய மு.க.ஸ்டாலின் அரசு ஆணையும் பிறப்பித்திருக்கிறார். அதேபோல் சட்டமன்ற நிகழ்வு தொடங்குவதற்கு முன்பும் "தமிழ்த் தாய் வாழ்த்து" தான் பாடப்பட்டு வந்தது இதில் "ஜன கன மன" தேசிய கீதத்தை ஏன் இணைக்க வேண்டும் ? "வந்தே மாதரம்" பாடலைப் போல் தமிழ் வாழ்த்துப் பாடலும் ஒரு விருப்ப தேர்வுதானே தவிர சட்டபூர்வ தமிழ்நாட்டுக்கான பாடல் அல்ல ; தேசிய கீதமே சட்டபூர்வமான பாடல் என்ற கருத்தியலை உறுதிப்படுத்துவதே இதன் நோக்கம்.

மாநில உரிமையை அடகு வைத்து விட்ட இந்தச் செயலை மறைப்பதற்கு ஒரு ஆதாரத்தை தேடித் தேடி கண்டுபிடித்து இருக்கிறார்கள். அதாவது சட்டமன்றத்தில் கலைஞர் படத்தை திறந்து வைக்கும் நிகழ்ச்சியில் குடியரசுத் தலைவர் பங்கேற்றபோது முதலில் தேசிய கீதமும் பிறகு தமிழ்த்தாய் வாழ்த்தும் பாடப் பெற்றது என்று முதலமைச்சர் விஜய் கூறுகிறார். இந்த ஓட்டைவாதம் மக்களிடம் எடுபடாது என்பதை தெரிந்து கொண்ட அவரே இதற்கான பதிலையும் கூறிவிட்டார் குடியரசுத் தலைவர் பங்கேற்ற நிகழ்ச்சி என்பதால் தேசிய கீதம் பாடி இருக்கலாம் என்று அவரே அதற்கு விளக்கமும் கூறியிருக்கிறார். பிறகு இதில் குற்றம் சாட்டுவதற்கு என்ன இருக்கிறது?

சொல்லப்போனால் இந்திய அரசியல் சட்டத்தின் படி இந்தியாவின் முதல் குடிமகனான குடியரசுத் தலைவர் பங்கேற்கும் நிகழ்ச்சியில் தொடக்கத்திலும் இறுதியிலும் தேசிய கீதம் மட்டுமே பாடப்பட வேண்டும் என்று இருந்த மரபை தமிழ்நாடு அப்படியே ஏற்காது ; தேசிய கீதத்தோடு தமிழ்த்தாய் வாழ்த்தையும் இணைத்து இங்கே பாட வேண்டும் என்று அதிலும் மாநில உரிமையை நிலை நாட்டி இருக்கிறார் தமிழின தலைவர் கலைஞர் .

இதற்கு நேர் மாறாக தமிழ்நாடு சட்டமன்ற மரபுகளை மாற்றி தமிழ்த்தாய் வாழ்த்து பாடலோடு தேசிய கீதத்தையும் கொண்டு வந்து இணைத்து தமிழ்நாட்டின் தனித்துவமான அடையாளத்தை சிதைத்து இருக்கிறார் முதல்வர் விஜய்.

**எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சட்டமன்றத்தில் நிகழ்த்திய உரையில் எடுத்து வைத்த எந்த குற்றச்சாட்டுக்கும் முதல்வரிடம் இருந்து பதில் வரவில்லை. மாறாக வசை மொழிகளை முதல்வர் என்ற தகுதியிலிருந்து கீழே இறங்கி வீசி இருக்கிறார்.**

எதிர்க்கட்சிகள் இல்லாத போது அவர்கள் மீதான குற்றச்சாட்டுகளை பேசலாமா? என்று அவரே கேட்டுக் கொண்டு அதற்கு பேரவை தலைவர் அனுமதியையும் வாங்கிக்கொண்டு பிறகு தனது "ஜிக்கு புக்கு" வசனங்களில் நடிக்க ஆரம்பித்து விட்டார்.

பொதுவாக சட்டமன்ற உரைகளில் மேடைப் பேச்சு போல உரத்த குரலில் முதல்வர்கள் பேசுவதில்லை. ஆனால் எதிர்க்கட்சிகள் காதில் விழ வேண்டும் என்பதற்காக உரத்த குரலில் பேசுகிறேன் என்றும் அதற்கு பேரவைத் தலைவர் அனுமதிக்க வேண்டும் என்றும் உலக சட்டமன்ற வரலாற்றில் எந்த முதலமைச்சரும் கேட்காத ஒரு அனுமதியை முதல்வர் விஜய் கேட்டு அதற்கு பேரவைத் தலைவர் அனுமதியும் வழங்கிய ஒரு அதிசய காட்சியும் சட்டமன்றத்தில் நிகழ்ந்திருக்கிறது.

இத்துடன் கூடுதலான ஒரு கோரிக்கையையும் முதலமைச்சர் வைத்திருக்கலாம்; உரத்த குரலில் பேசும்போது அவையில் ஒலிபெருக்கிகளை அனைத்து விட வேண்டும் என்றும் கேட்டு இருக்கலாம்.

அதேபோல் உரையின் இறுதியில் தான் ஒரு "**ஆக்ஷன்**" நடிப்பு செய்யப் போவதாகவும் அதற்கு பேரவை தலைவர் அனுமதிக்க வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார். உடனே பேரவைத் தலைவர் உங்கள் விருப்பப்படி எந்த "**ஆக்ஷனையும்**" செய்து கொள்ளுங்கள் என்றும் அனுமதி அளித்திருக்கிறார்.

முதல்வர் விஜய் நிகழ்த்திய அந்த ஆக்ஷன் என்ன தெரியுமா? கழுத்தை சீவுவது போல ஒரு ஆக்ஷன்! பின் வரிசையில் அமர்ந்திருந்த அவரது கட்சி உறுப்பினர்களும் இந்த அரியகாட்சியை கண்டு ரசிப்பதற்கு ஒரு டிஜிட்டல் திரையை ஏற்பாடு செய்திருக்கலாம்.

பேரவைத் தலைவர் இந்த ஆக்ஷனை சபை குறிப்பேட்டில் எப்படி பதிவு செய்யப் போகிறார் என்பது தெரியவில்லை! ஆனால் தமிழ்நாட்டு மக்கள் தொலைக்காட்சியில் இந்த இந்த ஆக்ஷனை நேரில் பார்த்திருக்கிறார்கள்.

**தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு இப்படி ஒரு முதலமைச்சரா என்று தலைகுனிய வைத்து விட்டது முதல்வரின்**

**"சவுண்ட் - ஆக்ஷன் - டயலாக்"**

**விடுதலை ராஜேந்திரன்**
திராவிடர் விடுதலைக் கழக பொதுச் செயலாளர்




---

### திருவாரூரில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள

# கடலூர் கிழக்கு மாவட்டம் வழியாகச் செல்லும் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு கடலூர் கிழக்கு மாவட்டம் சார்பில் சிறப்பான வரவேற்பு!

### மாவட்டக் கழகச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!



கழகத் தலைவர் அவர்கள் திருவாரூரில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள இன்று (24.06.2026 புதன்கிழமை) மாலை 05.00 மணியளவில் கடலூர் வழியாக செல்ல உள்ளார்.

எனவே கடலூர் ஆல்பேட்டை செக்போஸ்ட் முதல் கடலூர் மஞ்சக்குப்பம் தலைமை தபால் நிலையம் வரை கழகத் தலைவர் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க கடலூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள காட்டுமன்னார்கோயில், குறிஞ்சிப்பாடி, சிதம்பரம், கடலூர், புவனகிரி ஆகிய ஐந்து சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள கடலூர் கிழக்கு மாவட்டத்தை சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை வட்டம், வார்டு கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாநகர மேயர், மண்டல குழு தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர்கள், முன்னாள் மாவட்டக்குழு, ஒன்றியக்குழு ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநரக, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் மாவட்ட நிர்வாகிகள், கழக முன்னோடிகள், வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), பூத் டிஜிட்டல் ஏஜென்ட்(BDA), கழக தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ.**
செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

---

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் - அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியம்

# அஞ்சுகிராமம் பேரூர் தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் ஆலோசனை வழங்கினார்!

*கன்னியாகுமரி, ஜுன் 24 -*

*கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியம், அஞ்சுகிராமம் பேரூர் தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டமானது 22.06.2026, திங்கட்கிழமை அன்று மாலை 5.00 மணியளவில் அஞ்சுகிராமம் ஊர் முன்னேற்ற சங்க அலுவலகத்தில் வைத்து அஞ்சுகிராமம் பேரூர் செயலாளர் இளங்கோ தலைமையிலும், அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றிய செயலாளர் எம்.மதியழகன் முன்னிலையிலும் நடைபெற்றது.*

*கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.*

*கூட்டத்தில் அஞ்சுகிராமம் பேரூராட்சி தலைவர் ஜானகி இளங்கோ, துணை தலைவர் காந்திராஜ், பேரூர் பொருளாளர் ராஜ் திலக், மாவட்ட பிரதிநிதிகள் சுயம்பு, சிவக்குமார், ஒன்றிய பிரதிநிதி ஜெயக்கொடி, மாவட்ட தொண்டர் அணி தலைவர் திரு. குமார் உட்பட ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC, BDA மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.*

*தீர்மானம்: 1 -*

*கடந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கூட்டணி கட்சி வேட்பாளருக்காக உழைத்த கழக நிர்வாகிகளுக்கும், மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காள பெருமக்களுக்கும் மாவட்ட தி.மு.கழகம் மற்றும் அஞ்சுகிராமம் பேரூர் தி.மு.கழகம் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.*

*தீர்மானம்: 2 -*

*கழக பணியினை தொய்வின்றி நடத்த கழக தலைவர் தளபதியாரின் அன்பு கட்டளையை ஏற்று நடக்கவும், மாவட்ட கழகம் அறிவிக்கும் பணிகளை செவ்வனே நிறைவேற்றி கழகம் மீண்டும் ஆட்சி அமைக்க அயராது பாடுபட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.*

---

### திருத்துறைப்பூண்டி ஒன்றிய கழக முன்னாள் செயலாளர்

# எஸ்.பி.முருகதாஸ் நினைவு தினம் !

### ப.பிரகாஷ் - ஆர்.எஸ்.பாண்டியன் பங்கேற்றனர்!

திருவாரூர், ஜுன் 24–

திருத்துறைப்பூண்டி ஒன்றிய கழகத்தின் முன்னாள் செயலாளரும், கழக செயல் மறவருமான எஸ்.பி. முருகதாஸ் அவர்களின் 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி கட்டிமேடு, ஆதிரங்கத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.

நினைவஞ்சலி நிகழ்வில் நகர கழக செயலாளர்கள் ஆர்.எஸ்.பாண்டியன் ஒன்றிய செயலாளர் ப.பிரகாஷ் ஆகியோர் பங்கேற்று மறைந்த எஸ்.பி.முருகதாஸ் அவர்களின் நினைவாக கழக கொடியேற்றியும், அவரது திருஉருவப்படத் திற்கு மலர் தூவியும் மரியாதை செலுத்தினர்.

பின்னர் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில், அரசு பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இலவச கல்வி உபகரணங்களையும், ஊராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கு அரிசி உள்ளிட்ட பொருட்களை மறைந்த எஸ்.பி.முருகதாஸ் அவர்களின் நினைவாக அவரது குடும்பத்தினர் வழங்கினர்.

நிகழ்வில் ஒன்றிய துணை செயலாளர்கள் சேது முருகானந்தம், ஒன்றிய முன்னாள் செயலாளர் முகில். ராஜேந்திரன், மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் சிக்கந்தர், மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.பி.பாஸ்கர், வீரமணி, பன்னீர், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் எம்.என்.ராஜா, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் குன்னலூர் அன்பழகன், விவசாய அணி துணை அமைப்பாளர் விளக்குடி பாஸ்கர், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வினோத்குமார், கவிதா நவநீதன், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் போஜராஜன், அசோகன், ஆட்டூர் ஆ.வி.ராஜாராம், புகழேந்தி, முத்தரசன், பாமணி பாலு, கட்டிமேடு ஏ.பி.எம். செல்வம், ரவிச்சந்திரன், பூமாலை பாலு உள்ளிட்ட ஒன்றிய நகர மற்றும் கிளைக் கழக்க, வார்டு கழக நிர்வாகிகள் பங்கேற்று புகழஞ்சலி செலுத்தினர்.

---

### ஆலந்தூர் 164 வது வட்டச் செயலாளர்

# ஏசுதாஸ் மறைவு!

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜுன் 24 -

ஆலந்தூர் தெற்கு பகுதி 164 வது வட்டக் கழக செயலாளர் ஏசுதாஸ் நேற்று காலை இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க பெரிதும் வருந்துகிறோம்.

அன்னாரது மறைவு செய்தி அறிந்து, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்கு தெரிவித்துள்ளார்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியம், அஞ்சுகிராமம் பேரூர் தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் பேரூர் செயலாளர் இளங்கோ தலைமையிலும், அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றிய செயலாளர் எம்.மதியழகன் முன்னிலையிலும் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் அஞ்சுகிராமம் பேரூராட்சி தலைவர் ஜானகி இளங்கோ, துணை தலைவர் காந்திராஜ், பேரூர் பொருளாளர் ராஜ்திலக், சுயம்பு, சிவக்குமார், ஜெயக்கொடி, குமார் உட்பட ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC, BDA மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் 2 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

### திருவாரூரில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள கடலூர் வழியாகச் செல்லும் –

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு கடலூர் மேற்கு மாவட்டம் சார்பில் சிறப்பான வரவேற்பு!

### மாவட்டக் கழகச் செயலாளர் சி.வி.கணேசன் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

*கடலூர். ஜுன் 24 -*

*கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் சி.வி. கணேசன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:*

*கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருவாரூரில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள இன்று (24.6.2026 புதன்கிழமை) மாலை 05.00 மணியளவில் கடலூர் வழியாக செல்ல உள்ளார்.*



*எனவே கடலூர் ஆல்பேட்டை செக்போஸ்ட் முதல் கடலூர் மஞ்சக்குப்பம் தலைமை தபால் நிலையம் வரை கழகத் தலைவர் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க கடலூர் மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள்,*

*முன்னாள் இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், முன்னாள் இந்நாள் உள்ளாட்சிப் பிரதி நிதிகள், தொ.மு.ச. நிர்வாகிகள், வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA.2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), பூத் டிஜிட்டல் ஏஜென்ட்டுDA), கழக தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*